
1874

# சூரியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூரியன்

★ முந்திங்களுக்கு ஒரு தடவை உதிக்கும்.

★ ஆசிரியர்:

**எம். எச். எம். ஜவ்பர்**

★ உதவி ஆசிரியர்;

**கோ. சுரேஸ்**

★ முகவரி;

**''ஆசிரியர்''**
**சூரியன்**

25, தரவளை பஜார்,
டிக்கோயா.
(தபால் தொடர்புக்கு மட்டும்)

★ **இது;**

1994ம் ஆண்டின்
செப்டம்பர், நவம்பரின்
5வது உதயம்

★ **அன்பளிப்பு: 7/50**

**வருட சந்தா: 50 ரூபா**
(சிறப்பிதழ்கள் உட்பட)

**தபாற் கட்டளையில்**

பெறுபவர்;
M. H. M. JAUFER
மாற்றுமிடம்; DICKOYA
என்று குறிப்பிடவும்

அலையென பொங்கி; மரிக்கிற வலியை தொட்டுவிடுவோமோ எனும் அச்சம் அவ்வப்போது வலுத்து வலிக்கிறது. நிறங்களின் பால் ஈர்க்கப்பட்ட நமது தமிழ் படைப்பாளிகளையும், வாசகர்களையும் பிரித்தெடுப்பதில் விரைவில் வெற்றியை அடைய முடியாது தான்!

நிர்வாணகோலத்தில் பெண்ணை அட்டையில் நிறுத்தி-பெண்ணின் மகிமை பற்றி முழங்கும் முகமூடி இலக்கிய வாதிகளின் ஆக்கிரமிப்பும்-அவர்களுக்கு வழங்கப்படும் வரவேற்புகளும் வளர்ந்து வருகிற இளம் படைப்பாளிகளையும் அவ்வாறே வளர்த்து வருகிறது.

மனிதம் பற்றி பேசுகிறவன் தான், இனவாதத்தை இளைஞர்களிடம் ஊட்டி புகழ் பறிக்கிறான்.

வளர்கிற சிந்தனை சிற்பிகளை ஆக்கிரமிப்பிலிருந்தும், வியாபார இலக்கிய வாதிகளிடமிருந்தும் காத்து, இதுதாம் எங்கள் எழுத்துக்கள் என்பதை இனம் காட்டும் எமது முயற்சி, ஆண்டு மலரை தொடர்ந்து அச்சுருவில் வெளி வருகிறது; வீர்யமாய்

அடுத்த படி ஏற உங்களையே உயிராய் கொள்கிறோம்.

ப்ரியமுடன்...
ஆசிரியர்
செப்டம்பர் - நவம்பர்



## ஒரு தத்துவம் ஒரு யதார்த்தம்!

**- நிதானிதாசன் -**

இரவு
மெல்ல மெல்ல வரும்!
பயக் கனாக்கள்
நிமிர்ந்து வந்து
நிம்மதியை
கொஞ்சம் கொஞ்சமாய்
கொலை செய்யும்.

★

வயல்களின் வெளியில்
ஆறுகளின் இதயத்தில்
சந்திகளின் மையங்களில்......
எங்கள் மக்கள்
எந்த விசாரிப்புமின்றி
மரணத்துள் போர்த்தப்படுபவர்.

★

பௌத்தப் புரப்பாதையில்-
கோயில்களின் மணிகளில்
ஆலயங்களின் தூதுகளில்
மஸ்ஜீதுகளில் ஓதுதல்களில்
நாம்
அனைவரும்
அஹிம்சையை சந்தேகமின்றி
அங்கிகரித்துக் கொள்ளலாம்.

★

ஆனாலும்
சூர்யனைச் சாப்பிட்ட
மயான இரவுகளில்
எங்கள் மக்களை
மரணத்துள் வாழ்வித்த
நிஜங்கள் மட்டும்
நிமிர்ந்து கொண்டு
அஹிம்சையை சந்தேகிக்கும்!

## வாடி கிடந்தது போதும்

**- விஜயகௌரி -**

அவையிலே
''பெண்ணுக்கு முதலிடம்''
என்று முழங்கும் பேதைகளே!
அறையிலே பெண்ணுக்கு
அடிமை வடிவம் தருவதேனோ?

★

பத்து வயதில்
பந்தாக்கி ..
பதினாறு வயதில்
முக்காடிட்டு ...
எண்ணங்களை
சிதைத்து விட்ட
துயரம் போதும்!

★

எம் துயரம் கண்டுதான்
மேகங்களும் கறுத்ததோ?

★

தென்றலென பெண்ணை
வலிமை குறைத்தது போதும்!
எழு பெண்ணே
வீர்யத்துடன் புயலாய்.

★

வறண்டு வாடி கிடக்க
நாம் ஒன்றும்
பூமியாய் இருக்கப் போவதில்லை!

★

புரட்சி கொடி ஏந்தி
புதுமை பெண்ணென
நிமிர் வோம்.

 (கன்னிக் கவிதை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊருக்கு உபதேசம்

ச்சீ......
நீயுமொரு
மானிடப் பிறவிதானா?
''ஆணும் பெண்ணும்
சரிநிகர்'' என்று
சமத்துவம் பேசுகிறாய்
ஆனால் -


நமது முதலிரவில்
ரத்தம் உரைய வில்லை என்று
கைப்பிடித்தவளை
வதைக்கின்றாயே!

**வட்டவளை**
**இரா. ராஜேந்திரன்**

## சிதைத்தது போதும்!

வாழ்க்கை சில காலம்-
தெரிந்துமா மனிதர்களே!
சிதைக்கின்றீர்கள்!
மனிதன் உயர்திணையாமே!
அதற்குள்ளுமா
ஆயிரம் ஜாதிகள்!
தமிழர், சிங்களவர், முஸ்லிம்
வேற்றுமை விதைக்கின்றீர்! ..
ஒன்றுக்குள் ஒன்று என்றாலும்
துவேஷ அணு பாயுமெனில்
ஒற்றுமை சுக்கு நூறாகும்
நமது நட்பு
நடுத் தெருவிற்கு வந்து விட்டது!
தொடர்ந்தும் பிரிவோமெனில் ..
வெட்கம் கெட்டவர்கள்
மனிதர்கள்!

**புத்தளம்**
**- ஜெயந்தி சிதம்பரம் -**





# சிற்பக் கூடம்

**— தாயுமானவன் —**

வாசகர்களுக்காகவும், வளரத்துடிக்கும் இளம் படைப்பாளிகளுக்காகவும் சூரியனின் புதிய சாளரம் திறக்கப்படுகிறது. இந்த தொடர் மூலமாக புதிய சில சிற்பிகளை இனம் காணமுடியும் என்பது எமது நம்பிக்கை.

இந்த வாரம் நீங்கள் தரிசிக்க இருப்பவர்கள் புளியாவத்தை N. E. I. ல் கல்வி பயிலும் எமது நம்பிக்கைக்குறிய உயர் வகுப்பு மாணவர்கள்.

தந்தி ஒரு தகவல் தொடர்பு சாதனம். சாவு செய்தியை மட்டுமே சுமந்து வரக்கூடியது தந்தி என்று சிலர் கருதிவிடுவதால், அவர்களது உயிரையே பரித்த சம்பவங்களும் உண்டு.

மிகச் சிக்கனமான வார்த்தைகளின் மூலம் எதையும் உடன் தெரிவிக்கும் வடிவம் இது. சிற்பிக்களுக்கு முழு சுதந்திரம் தரப்பட்டது 'சமகாலத்தவர்களுக்கோ, வாழ்ந்து மறைந்தவர்களுக்கோ, இலக்கிய பாத்திரங்களுக்கோ, 21ம் நூற்றாண்டின் ஒரு மனிதனுக்கோ தந்தி அடிக்கல என்று கூறி சில கோடுகளைக் காட்டினேன், அவர்கள் ஒரு சித்திரத்தையே தீட்டி வந்து அதிசயிக்க வைத்தனர்.

**நான் காட்டிய கோடுகள் :-**

(1) தேர்தலில் போட்டியிட்டு, வெற்றிவாகை சூடி பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட வள்ளல் வானரம் பற்றி...... ஒரு தொண்டனின் தந்தி நண்பனுக்கு.

''வள்ளல் வானரம் சிவலோக பதவி பெற்று விட்டார்',

— தொண்டன்.

(2) சீதையைத் தேடி இலங்கை வந்த அனுமான், இராமனுக்கு அடித்த அதிர்ச்சி தந்தி இது.

''சீதையையும் கும்பகர்ணனையும் காணவில்லை''

— அனுமான்.

(3) மாமி வீட்டுக்கு வந்துபோன மருமகன், அவளுக்கு அடித்த தந்தி.

''என் இதயத்தை அனுப்பி வைக்கவும்''

— அம்பிகா (வின்) பதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இவைகளை உள்வாங்கி அவர்கள் வெளிப்படுத்தியவைகளில் சில:-**

★ **சிற்பி : பெ. ஜீவராணி**

செத்துப்போன உடல் தன்னை பிரிந்த உயிருக்கு அனுப்புகிற தந்தி

''அன்பிருந்தால் மயானத்திற்கு வந்துவிடு''

உடல் —

★ **சிற்பி : அ. சகாயமேரி**

போதை பொருளுக்கு அடிமையான ஒருவனின் தந்தி

''அழைப்புக்கு நன்றி! அழிய வருகிறேன்''

— குடி . யானவன்

★ **சிற்பி:- ஹோன்சி சந்திரகுமாரி**

20ம் நூற்றாண்டு கண்ணகி கோவலனிடம் அவசரத்தில் சிலம்பை மாற்றி கொடுத்து அனுப்பிவிட்டாள். அதன் பின் அவளுக்குள் அடித்துக் கொண்ட தந்தி.

''பக்கத்து வீட்டு கண்ணகியின் சிலம்பை அனுப்பிவிட்டேன்!

— கண்ணகி

★ **சிற்பி : சண்முகவேல் கமல்**

பூமி மீது காதல் கொண்ட வானம், தன் காதலையும் சொல்லி விட்டது! தன்மீது காதல் கொண்ட வானத்திற்கு பூமியின் தந்தி இது.

''நீ மேல் சாதி, நானோ கீழ் சாதி... இணையவிடுவார்களா பெற்றோர்''

— பூமி

★ **சிற்பி : ஆர். பிரமிளா**

வாடிக்கிடக்கும் ஒரு பூவுக்கு, ஒரு சிட்டுக் குருவியின் அனுதாப தந்தி.

'' வண்டுமா சீதனம் கேட்டது உன்னிடத்தில்''

— சிட்டுக் குருவி



★ **சிற்பி:- என். எஸ். பெணான்டோ**

இணைந்திருந்த இதயங்களில் ஒன்று பிரிந்து விடுகிறது. பிரிவு சுட்டு.. பாதி கறைந்து போன ஒரு உள்ளம்

''பிரிவு சுமை .... பாதி......க்கப்பட்டுள்ளேன்''

- உன் பாதி

★ **சிற்பி:- எஸ். மேனகா**

தன்னைத் திருடத் தந்தாள் அவள். அவனோ ஒருநாள் பிரிந்துப் போனான். அந்த பிரிவுத் தீச் சுமந்து ஒரு மெழுகுவர்த்தி காதலியின் தந்தி:

''பாழடைந்து விட்டாய் ..... இனி தே-டாதே

- இவள் -

அடுத்த இதழில் சந்திக்க இருப்பவர்கள்... ?
புதிய யுகம் - புது வேகம்! உள்ளம் திருட வளம் வருவார்கள் நோர்வூட் பகுதி மாணவர்கள்

**- தாயுமானவன் -**

சுடர் மிகும் அறிவுடன் படைத்து விட்டாய்,

வல்லமை தாராயோ, இந்த

மா நிலம் பயனுற வாழ்வதற்கே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம்பிக்கை நதியில் குளிக்கவா!

இளைஞனே!
ஏன் அழுது கொண்டிருக்கிறாய்?
தோல்விச் சுமை சுமந்து சோர்ந்து போனாயா?
மனம் மரணத்தை நாடிக் கொண்டிருக்கிறதா?
தற்கொலைக்கு தயாராகி விட்டாயா?
வேண்டாம்! வேண்டவே வேண்டாம்!!
மரணம் பிரச்சினைக்கு தீர்வாகி விடுமா?
இல்லையே!

இளைஞனே!
தோல்விதான் வெற்றியின் படி - இதை படி
தோல்வியை வீசி எறி! செயல்படு!
வெற்றி வெகு தூரத்தில் இருக்காது.

உனக்குள் நம்பிக்கையை வளர்த்துக் கொள்
உன் வளர்ச்சியின் வேர்கள் அவை
உன் இலட்சியத்தை அடைவதிலேயே கண்ணாய் இரு
சவால்களை எதிர்த்து போர் செய்
பூமி உன் காலடியில் வந்து கிடக்கும்.

நீ வாழ்வதற்காகப் படைக்கப்பட்டவன்
பிறந்தோம் இறந்தோம் என்று இருக்காதே!
சரித்திரம் உன் பெயரையும் உச்சரிக்க வேண்டும்.
இமய மலையாக நீ உயர வேண்டும்.

ஏன் நீ உலகை, உயிரை வெறுக்கின்றாய்?
நிலவில் இறங்கிய 'நீல் ஆம்ஸ்ரோங்,
உன்னை போன்ற மனிதன் தான்!
விண்ணில் பறந்த 'கியூ ககாரின்'
ஒரு மானிட பிறவிதான்!!
சாதனை வீரன் 'லாரா'வை நினைத்து பார்
அவனும் இளைஞன் தான் !!!
வழுக்கல் அவர்களையும் வீழ்த்தி விட்டிருக்கிறது!
அவர்கள் வாழவில்லையா?
சாதித்துக்காட்டவில்லையா?

உனக்கு ஏன் முடியாது?
முடியும்! முடிச்சி அவிழ்த்து வா
அவர்களின் வெற்றிக்கு பின்னால்
முயற்சி மறைந்திருக்கிறது
அதனால் அவர்கள் வெற்றிவாகை சூடிக்கொண்டார்கள்
உன்னிடம் முயற்சி இல்லை
அதனால் வெற்றி கிடைக்கவில்லை
தோல்வி அடைந்து விட்டாய் என்று
நான் சொல்லவில்லையே!



முயற்சி திருவினையாக்கும்
முயற்சி இல்லாவிட்டால் ஒரு வினையும் நடக்காது
முயற்சி செய்பவன் வெற்றி பெறுகிறான்
முயலாதவன் தோல்வி அடைகின்றான்

''கஷ்டங்கள், நஷ்டங்கள் அடைந்த பின்புதான்
மனிதன் அதிக அடக்கத்தையும் அறிவையும்
பெறுகின்றான்''... அறிஞர் பிராங்க்ளின் சொன்னது
அதேபோல் தோல்விக்கு பின்தான்
வெற்றி நிலை கொண்டுள்ளது என்கிறேன் நான்

''எடுத்த கருமத்தில் நாட்டம் கொண்டவர்கள்
உறுதி குலைய மாட்டார்கள்
செயலில் உறுதிக் காட்டி
வெற்றி பெறுவார்கள்'' .. ஷோப்பனின்
வார்த்தை இது! உரம்!!

இளைஞனே!
இன்னுமா உனக்கு விளங்கவில்லை?
ஏன் இன்னும் இருட்டில் கிறங்கிக் கொண்டிருக்கிறாய்
உனக்காக ஒரு விடியல் காத்திருக்கிறது!
ஒளி நிரம்பிய உலகம்
உன் வரவிற்காக ஏங்குகிறது!

நேற்று என்பது முடிந்த கதை
நாளை என்பது நம் கைகளில் இல்லை
இன்றே செயலில் இறங்கு
போட்டியிடு பொறாமை கொள்ளாதே!
எதிர் காலம் உனக்காகவே

இளைஞனே
நீ தடம்புரண்டு போனவனல்ல!
தரணியில் தலைவனாக வேண்டியவன்
நீ வாழ்க்கையை வெறுக்க கூடாது
வாழ்க்கையின் சவால்களை எதிர்க்க வேண்டும்

நீ நமது ஜனநாயகத்தைப் போல
பெயரளவில் வாழ்ந்து விடலாகாது
அலைமாதிரி - பூமி முடியும் வரை
உன் பெயர் உச்சரிக்கப்படுதல் வேண்டும்!

**- பா. ரதிப்ரியன் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது உங்கள் தீர்ப்பு

★ இரு கண்களையும் மூடிக்கொண்டு, இருளில் அமர்ந்து கொண்டு ஒளி தேடும் கனவின் பால் இணையாமல் துடிப்புடன் செயல்படும் உங்களுக்கு வாழ்த்துக்கள்.

ஹைலன்ஸ் ம.ம.வி. அட்டன். — திருமதி இ. சிர்பாதம்

★ ஹொரன்சி சந்திரகுமாரியின் கவிதையும், தாயுமானவன். பா. ரதிப்ரியன் தொகுத்தளித்த நேர்காணலும், பெண்களுக்கு இச் சமூகம் வழங்கும் அநீதிகளையும் அற்புதமாய் எடுத்துக்காட்டியன புதுமையான அம்சங்களுடன் சூரியன் தொடர்ந்து வெளிவர வேண்டும்.

பூலாச்சேனை, — சஹர்பான் மலர்

★ மகளிர் தினச் சிறப்பிதழாய் வெளியாகி இருந்த சூரியனில் சமகாலத்தை முழுமையாக தரிசிக்க கூடியதாய் இருந்தது. எமக்காக எழுந்த சூரியன் உதயத்திற்காக உதவுவோம்.

புத்தளம், — ஜெயந்தி சிதம்பரம்

★ ஆண்டு மலரான சூரியன் கொள்ளை கொண்டது.

கலவான, — சரவணேஸ் டெய்சி

★ பிரமாதமாய் இருந்தது! மகளிர் சூரியனுக்கு தந்த ஆதரவை விட சூரியன் மகளிருக்கு வழங்கிய ஆதரவு அமோகம். நேர் காணல் மங்கையரின் நெஞ்சக் கனல் சுடர்விட்டு பிரகாசிக்க வேண்டும் சூரியன்

பசறை, — ஏ. எஸ். பாலச்சந்திரன்

★ சிறப்பிதழ் சிறப்பாய் இருந்தது. மகளிர்க்கு நடக்கும் அநீதிகளை எதிர்த்து குரல் தரும் தங்களிருவருக்கும் பாராட்டுக்கள்.

பங்கொல்லாமட, — தஸ்லிமா எஸ். உமர்



— சூரியனின் ஒவ்வொரு உதயங்களும் பாராட்டக்கூடிய விதத்தில் வெளிவருவது மகிழ்ச்சியை தருகிறது. பணி தொடர வேண்டும்.

தர்ஹா-நகர், — நிஸ்வா சலாம்

— நான்காவது இதழில் பெண்களை விழிப்படையச் செய்துள்ளீர்கள். பெண்கள் பற்றிய கருத்துக்கள் ஆழமானவை. அதிர்வை ஏற்படுத்தும் உரம் வாய்ந்தவை!

நோர்வூட். — ச. கலா

மன்னவா!
இதயத்தில் உன்னை
வைத்து பூட்டினேன்
எவ்வாறு மனந்திறந்து
பேச முடியும்

அன்பே......!
உன் விழிகளால்
என் மனதை திறந்தாய்
உன் காதலால்
என் வாழ்வை துறந்தேன்.

**எஸ் விஜயகொரி**

**தீர்ப்பு எழுதுகின்ற சிற்பிகளே! நடு நிலைவாய்ந்த உங்கள் தீர்ப்புகளையே எதிர்பார்க்கின்றோம் ஒவ்வொரு படைப்பும் உங்களில் எவ்வித தாக்கத்தை ஏற்படுத்தி விட்டன என்பதை எழுதுங்களேன். அது வளமாய் - உரமாய் அமையும்.**

**ஆ+ர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை:

# அப்பாவும், மிச்சமிருப்பவையும்

— தாயுமானவன் —

அப்பா தூங்கிக் கொண்டிருக்கிறார். வழமையாக அப்பா இப்படி தூங்குவதில்லை முகம் கறுத்து போயிருந்தது. பெட்டிக்குள் வைத்திருந் தனர்: தலைமாட்டில் குத்து விளக்கு எறிகிறது. கால் மாட்டில் கொஞ் சம் பூக்கள்:

அம்மா இரண்டு மூன்று தடவை மயக்கம் போட்டு விழுந்து விட் டாள். அம்மா மயங்கும் போது அவளது மடிக்குள் குந்தி இருந்த இவ னும் கீழே விழுந்தான். முகம் தெரியாத சிலர் தேம்பும் இவனை தூக்கி னார்கள். அம்மாவுக்கு தண்ணீர் தெளித்தார்கள்.

சிலர் டொபி, பிஸ்கட் வாங்கி தந்தனர். இவனால் தின்ன முடிய வில்லை வாங்கி காற்சட்டை பைக்குள் வைத்துக்கொண்டான்.

மூத்திரம் முடுக்கியது, அம்மா அருகே குந்தியிருந்தவன் காதுக்குள் சொன்னான்: அம்மா மரம் மாதிரி விரைத்து போயிருந்தாள். சத்தமாக செல்லிப்பார்த்தான் அம்மாவுக்கு கேட்கவில்லை.

சிவபாக்கியம் மாமி இவனைக் கூட்டிப் போய் மூத்திரம் இருக்கச் செய்தாள். தான் வீட்டுக்கு தூக்கிபோனாள்.

''பசிக்குமேடா கண்ணு... சாப்புடேன்''

''பசியில்ல... தண்ணி தாவம் மட்டுந்தா''

மாமி காச்சி வைத்திருந்த பாலை, சீனி போட்டு தந்தாள் சீனி போட்டு குடிக்க இவனுக்கு ரொம்ப பிடிக்கும். மட மட வென்று குடித் தான்.

இவன் டொபி ஒன்றை தின்றுக் கொண்டு வாசலுக்கு வந்தான் லயத்தில் நடுக் காம்புரா இவர்களுடையது. வாசலில் சிலர் பந்தல் போட்டுக் கொண்டிருந்தார்கள்.

பந்தல் உச்சியில் கொடி ஒன்றை கட்டிக் கொண்டிருந்தனர். அட வெள்ளைக் கொடி இல்லை. தேவாரம் ''தலைவர்'' கொடி கட்டும் இட த்தை சொல்லிக்கொண்டிருக்கிறார்.



''அப்பாவை ஏன் கொன்றார்கள்?'' அப்பா செத்த செய்தி கேட்ட முதலாய் இவனுள் எழுந்த வினா இது. யாரிடம் போய் கேட்பான் அப்பாவிடம் கேட்டால் கதைமாதிரி சொல்லித் தருவார். கேட்க நல்லா இருக்கும்.

மோகன் மாமா கையில் ஆஸ்பத்திரி கட்டோடு ஓடி ஆடி வேலை செய்து கொண்டிருக்கிறார் அம்மா பாவம், எதையும் சாப்பிடாமல் இருக் கிறாள்.

சிலர் இவன் தலையை ஆறுதலாய் தடவி விட்டுக் கொண்டிருக் கின்றனர். சாவு வீட்டில் வேடிக்கை பார்க்க இவனுக்கு பிடிக்கும். ஆனால் இன்று ஏனோ இப்படி இல்லை:

கொஞ்ச காலத்திற்கு முன்பு, தேர்தல் காலம் அப்பாவும் மோகன் மாமாவும் அடிக்கடி ஏதோ ரகசியம் பேசிக் கொள் வார்கள். இரவில் எங்காவது போய் விட்டு சாமத்தில் தான் வருவார்கள்

லயத்தின் கோடியில் போஸ்டர் ஒட்டப்பட்டிருக்கும் இவன் எடுத் துக் கூட்டி வாசிப்பான் எதுவும் புரியாது.

அப்பாவும் போஸ்டர் கொண்டு வருவார் - யாருக்கும் தெரியாமல் அந்த போஸ்டர் இந்த போஸ்டர்கள் போல இருக்காது.

வேறு ஒருத்தருடைய படம் தான் இருக்கும் இரவோடு இரவாக போய் போஸ்டர் ஒட்டும் அப்பாவும் மோகன் மாமாவும் கொஞ்ச நாட் களில் கறுத்த ரோட்டுக்கு பக்கத்தில் கொடியும் கட்டி விட்டார்கள்.

ஒரு நாள் இரவு அப்பாவும், அம்மாவும் சத்தமாக கதைத்துக் கொண்டிருப்பதில் இவன் விழித்துக் கொண்டு, செவி நீட்டினான்.

''... நீ சொல்ற மாதிரி மனுசனா வாழனும்னுதான் நானும் விரு புறேன்! நம்மல ஆடு, மாடு, மாதிரி இல்ல ஓட்டுரானுவ!...''

''அதுக்கா... எவனோ எலக்ஸன்ல நிக்க நீங்க ஏன் போஸ்டர் ஒட்டனும் சங்கம் சேர்க்கனும் நாளக்கி ஜெயிச்சா அவே நமக்கு என்னா மூட்ட மூட்டயா அனுப்பவா போறான்.

'இந்த பாரு .... நீ பொம்பள ஒனக்கு அரசியல் வெளங்காது எல க்ஸன்ல நிக்கிறது நம்ம தலைவர் அவருட்கு நல்ல அரசியல இங்க உள்ள பொறம் போக்கு நாயிகளுக்கு புடிக்கிதில்ல எத்தன வருஷமா நம்மல ஆட்டி படைக்கிறானுவ இவன் முகத்தில கரி பூசனும்னா போஸ்டர் ஒட்டனும் எங்க தலவனுக்கு ஓட்டு போடனும்!! ஜெயிக்க வக்கனும்!!!

இவனுக்கு தூக்கம் வந்தது, தூங்கி விட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாவும், மோகன் மாமாவும் தோட்டத்தை குழப்புவதாக சொன்னார்களாம். அம்மாவோடு கொஞ்சம் பேர் கதைப்பதும் இல்லையாம். தோட்டம் பூரா அப்பாவை நிறையபேர் ஏசினார்களாம். ஸ்கூல்ல ரெங்கா தலவருட்டு மகன் தேவராஜி இவனுடன் கதைப்பதில்லை. அவன், அவன் லயத்து செட்டோடு சேர்ந்து கொண்டு இவன கண்டால் நக்கலடிப்பான் அவங்க அப்பா இவனுடைய அப்பாவை எப்ப இருந்தாலும் ஒரு நாள் வெட்ட போறதாக சொன்னதாக சொன்னான்.

ஒருநாள் இரவு இவனும் அம்மாவும் சாப்பிட்டு முடித்து விட்டு கூதல் காய்ந்து கொண்டிருந்தனர். அப்பாவும் மோகன் மாமாவும் மேல ஒரு தோட்டத்துக்கு போஸ்டரோட போய் வரவில்லை. கதவு தட்டும் சத்தம் இவனுக்கு அச்சத்தை ஊட்டியது. அம்மா ''யாரு ..'' என்றாள்.

''கதவ திற ..'' என்றனர்.

இவன் அம்மாவை பார்த்தான், அம்மா கதவு பக்கத்திற்கு போனாள். திறக்கவில்லை. ''நீங்க'' பயம் கலந்த குரலாய் அம்மா கேட்டாள்.

''ஓ புருசன்தான்டி கதவ தொர''

இவன் வீர் என்று கத்திவிட்டான். அம்மா காம்புராவுக்குள் போய் கதவை தாழ்ப்பாள் போட்டுக்கொண்டாள். அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்கள் எழுந்திருக்க வில்லை.

''ஓ புருசன பொத்திக்கிட்டு இருக்க சொல்லிடு இல்ல ..'' பச்சை தூசனத்தில் ஏசிவிட்டு போய்விட்டனர்.

பேயரைந்தவர்கள் போல இருவரும் உட்கார்ந்து கொண்டனர்;

அன்று நடுசாமம் ஆன பிறகுதான் அப்பா வந்தார். இவன் மிரண்டு போய் இருந்தான். அம்மா கதறி அழுதாள்.

''எல்லாம் அந்த ரெங்காவுட்டு வேலைதான்! ஏ எனக்கிட்ட வாலாட்டுறது. பொட்ட நாய்கள்''.. அப்பா அம்மாவிற்கு சமாதானம் சொன்னார்.

மறுநாள் அம்மாவும் சிவபாக்கியம் மாமியும் கதைத்துக்கொண்டிருந்தார்கள். மாமா இல்லாத நேரம் பார்த்துதான் அவன்கள் அங்கும் போய் இருக்கிறார்கள்.

''இந்த தோட்டத்துல பணகாரன்ற திமுறுதா அவனுக்கு சாராயத்தை ஊத்தி நம்ம சனத்த அவன் பக்கமில்ல இழுத்துக்கிட்டான்...''

''முந்தி ஒருநாள் இவரு வேற சங்கத்துக்கு மாறபோறதா சொன்னதும் அடிச்சு ஒதப்பேன்னு அவே மிரட்டி இருக்கான் புள்ள''...



இவன் அதற்கு மேல் அதை கேட்டுக்கொண்டிருக்க வில்லை. ஏதோ ஒன்று நடக்கும் என்று இவனின் பிஞ்சு மனசுக்குள் தெரிந்தது.

அன்று எலக்ஸன் அப்பா, அம்மா இருவரும் காலையிலேயே ஓட்டு போட போகும் போது இவனும் அவர்களுடனே போய் வந்தான். மை பூசுகிற ஆள் இவனுச்கும் மை பூசிவிட்டதை, எல்லா பயல்களிடமும் காட்டி ''ஓட்டு போட்டிருக்கேன் பாருங்கடா'' என் பெருமிதம் கொண்டான்.

அன்று இரவு அப்பா ரேடியோ போட்டுக்கொண்டிருந்தார். பத்து மணியிருக்கும் கூரையில் கல்விழும் சத்தம். அப்பா சாரத்தை வரிந்துக் கட்டிகொண்டு எழுந்த போது அம்மா அப்பாவின் காலை இறுக்கிக் கட்டிப் பிடித்துக்கொண்டாள்; இவனும் ஓடிபோய் அப்பாவின் காலை கட்டிப் பிடித்துக்கொண்டான் ''போவாதிங்க அப்பா...'' என்று கெஞ்சினான்.

கொஞ்ச நேரத்தில் கல் விழுவது நிறுத்தப்பட்டது. வெடி போட்டார்கள் வாசலில்!. அப்பா பாயிலே குந்தியிருந்தார்.

''இவனுங்களுக்கு ஒரு வழி பண்ணணும்; நாளைக்கி போலிஸ்ல என்றி போடனும்.'' அப்பா அடிக்கடி சொல்லிக் கொண்டார்.

காலையில் அப்பாவும் மோகன் மாமாவும் பொலிஸுக்கு போனார்கள்; நேரத்தோட வீடு திரும்புவதாகதான் சொல்லிவிட்டு போனார்கள்.

அன்று மாலையாகியும் வரவே இல்லை. மறுநாள் காலை மோகன் மாமா பொலிசோடு வந்து சொன்னபோது மயங்கி விழுந்தாள் அம்மா

''கிருஸ்ணமூர்த்தி தலைவர் அஞ்சலி செலுத்த வராராம். பந்தல அழகா சோடிக்கனும்'' ஒவ்வொருத்தரும் சொல்லிக் கொண்டே இயங்கினார்கள்.

அந்த கேள்வியை தலைவரிடம்தான் கேட்க வேண்டும் என்று நினைத்துக்கொண்டான். இவனுக்கு அப்பாவை பார்க்க வேண்டும் போலிருந்தது

பெட்டி அருகே போனான்! எட்டித்தான் பார்க்க வேண்டியிருந்தது அப்பாவை தொடவேண்டும் போலிருந்தது. தொட்டான், சில் என்றிருந்தது. விழிகள் மாரிவானம் போல .. அழுதான். 'கோ' வென்று இவனை பார்த்து கரைந்தது.

அன்று தலைவர் வரவில்லை. எனவே அடுத்த நாள்தான் புதைப்பதாகிவிட்டது. மறுநாள் மாலைவரை தலைவர் வராததால் அப்பாவின் உடலை தூக்கிவிட்டனர். அம்மா மயங்கி விழுந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதைகுழியை அடையும் போது கிருஸ்ணமூர்த்தி தலைவர் பொலிஸ் படை சகிதம் வந்து இறங்க, இவனும் கிருஸ்ணமூர்த்தி தலைவரை எட்டிப் பார்த்தான். அப்பா நேசித்த, போஸ்டரில் சிரித்த அவரேதான் இவர்.

கொஞ்சம் பேர் தலைவரை சூழ்ந்து கொண்டனர். மாலை போட்டார்கள். அவர்கழுத்தை நிறைத்த மாலைகளில் ஒன்று அப்பாவின் கழுத்திலிருந்து எடுத்ததே!

இவன் கேட்க நினைத்த அந்த கேல்வியை தலைவரிடம் கேட்பதற்காக அருகே சென்றான்! தலைவர் இவனை விசாரித்து, தலையை தடவிவிட்டார்.

''எங்க அப்பாவ ஏன் கொன்னாங்க?''

இவன் வாயை பொத்தி, பேசாதிருக்கச் செய்தார். மோகன் மாமா தலைவர் இவன் கேள்வியால் ஆடி போய் இருக்கக்கூடும்

தலைவர் சின்ன காகித பார்சலை இவனிடம் கொடுத்தார். பணக்கட்டாகதான் இருக்கவேண்டும். மாமா இவன் கையை பிடித்து, வாங்க சொல்லி விட்டு, காலில் விழுந்து கும்பிடும்படி சொன்னார். அப்படியே செய்தான்.

தலைவர் கொஞ்ச நேரம் பேசினார்.

அப்பாவை புதைத்தார்கள். கிருஸ்ணமூர்த்தி தலைவர் ஜீப்பில் ஏறினார். வேகமாய் போய்மறைந்தார்! முன்னே பல்பின் வெளிச்சமும், பின்னே சிவப்பு லைட்டின் வெளிச்சமும் கூட மறைந்து விட்டது.

இருட்டு இறங்கிய சாலையில் - பழக்கப்பட்ட கால்கள் அப்பாவை புதைத்து விட்ட திருப்தியில் திரும்பி கொண்டிருந்தன.

அந்த வினா மட்டும் இவனோடு பிரியாமலே இருக்கிறது

( முற்றும் )

வில்லினை யெடடா! - கையில்
வில்லினை யெடடா! அந்தப்
புல்லியர் கூட்டத்தைப் பூழ்தி செய்திடடா!

- சுப்பிரமணிய பாரதியார்



# "சூரியன்" சில குறிப்புரைகள்

— இரா. ஜெட்ரொஸ்கி —

நீண்ட வரலாற்று பயணத்தையும், பணியையும் மேற் கொண்டுள்ள 'சூரியன்' இதழ் ஓராண்டு பூர்த்தி அடைந்து விட்ட நிலையில், இச் சஞ்சிகை பற்றிய சில குறிப்புரைகளை எழுதுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

பிரதேச ரீதியாக, இன ரீதியாக, மத ரீதியாக, சாதி ரீதியாக மனித இனத்தை அடிப்படையில் தொழிலாளரை அவர்களின் ஐக்கியத்தை சிதைத்து கூறு போடும் இலக்கிய முயற்சிகளின் மத்தியில் இன, மத, மொழி சாதி அனைத்திற்கும் அப்பாற்பட்ட ஒரு நிலையில் பொதுமையுணர்வினை அடிப்படையாகக் கொண்டதாக இச் சஞ்சிகை மிளிர முயற்சிக்கின்றது. என்ற வகையில் தமிழ் இலக்கியத்தில் விரல் விட்டு எண்ணக் கூடிய முற்போக்கு சஞ்சிகைகளின் அணியில் சேர்க்கத்தக்க தகைமையினை கால ஓட்டத்தில் 'சூரியன்' அடைய முடியும் என்பது எனது அபிப்பிராயமாகும்.

ஒரு இளந்தலைமுறையினரின் எதிர்காலமே கொள்ளையடிக்கப்பட்டு, முடமாக்கப்பட்டுள்ள சமகாலத்தில் இளம் தலைமுறையினருக்கு ஆக்கத்தையும், ஊக்கத்தையும் அளிக்கும் ஒரு இதழாக 'சூரியன்' அமைய வேண்டும்.

கட்டுரையின் விரிவஞ்சி சில குறிப்புகளை சுருக்கமாக தருகின்றேன்

## 1. இளம் படைப்பாளர்களும், கடமைகளும்.

பிரசுரிக்கப்பட்ட நான்கு இதழ்களிலும் கவிதை, கட்டுரை, சிறு கதை போன்ற இலக்கிய வடிவங்களில் தம்முடைய ஆளுமையை செலுத்த இளம் படைப்பாளர்கள் முயன்றுள்ளனர்.

ஏதோ ஒரு வகையிலும், அளவிலும் தம்முடைய சமூக பிரச்சினைகளை தம் படைப்புகளில் உள்வாங்க முயன்றுள்ளனர்.

குறிப்பாக இப்படைப்பாளர்களுக்கு 'சூரியன்' ஒரு களத்தினை அமைத்துக் கொடுத்திருக்கிறது என்பது வெளிப்படை.

இவ்விடத்தில் சூரியனின் கடமையினையும் - நோக்கினையும் பாதிக்காத - மந்தப்படுத்தாத வகையில் முன்னெடுக்க வேண்டியது அவசியமாகிறது. எனவே, இளம் படைப்பாளர்கள் சூரியனை வெறும் பயிற்சி களமாகவன்றி அதன் வளர்ச்சியினை ஊக்குவிக்கும் பணியினையும் அதன் நோக்கத்தை பூர்த்தி செய்ய ஒத்துழைப்பு வழங்குவது இளம் படைப்பாளர்களின் அத்தியாவசிய கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. சமூக மாற்றத்திற்கான ஒரு ஆயுதமாக்கல்.

சூரியனின் அனேகமான படைப்புகள் சமகால பிரச்சினைகளை உள்ளடக்குகின்றன. எனினும் வெறுமனே பிரச்சினைகளை விவரிப்பதோடு மட்டும் அதன் பணி நின்று விடக்கூடாது.

அனேகமான படைப்புகள் உலக அவலத்தினைக் கண்டு நொந்துக் கொள்வதும் புலம்புவதுமாக அமைகின்றன. இளம் தலைமுறையினராகிய நாம் பிரச்சினைகளை கண்டு துவண்டு விடாது, பச்சாதாதப்பட்டு விடாது பிரச்சினைகளை விளங்கி - விவரித்து தீர்வினை முன்வைப்பவர்களாக பிரச்சினைகளை தீர்க்க முனைபவர்களாக திகழ வேண்டும்.

எனவேதான் 'சூரியன்' அவலங்களைக் கண்டு பச்சாதாபப்படும் ஒரு இதழாகவன்றி சமூக மாற்றத்திற்காக பிரயோகிக்கப்படும் சக்திகளின் பிரதான சக்தியாக மாற்ற அனைத்து படைப்பாளிகளின் ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம்.

## 3. சூரியனின் அபிப்பிராயம்.

சூரியனின் நான்கு இதழ்களிலும் ஒரு குறிப்பிட்ட வளர்ச்சியினை காண முடிகிறது.

நிகழ்கால விடயங்கள் சிலவற்றை உள்ளடக்கி வந்த 'சூரியன், அப்பிரச்சினைகளில் முக்கியத்துவம் வாய்ந்த சில விடயங்களை இன்னும் விரிவாக ஆராய முற்பட்டமை வரவேற்கக் கூடியதே.

'உயர் கல்வியில் மலையக மாணவர்கள்' 'மலையகத் தமிழரின் இன்றையப் பிரச்சினைகள்' என்பவற்றோடு, 'மகளிரின் பிரச்சினைகளை, உள்ளடக்கிய தன்னுடைய 4 வது இதழை மகளிர் சிறப்பு மலராக வெளியிட்டு பெண்ணடிமை நிலையினை ஆராய்ந்து வெளியிட முற்பட்டமையும் 'சூரியன்' வீரியமான வளர்ச்சியினை அடைவதற்கான அறிகுறிகள் எனலாம்.

(தொடரும்.........)

மாணவர்களுக்கான [illegible]



இளைய தலைமுறையினரின்
இன்றின் அவலத்தை - தேசத்தின்
இன்றைய நிகழ்வுகளை கூறும்
இருள் போக்கும் சூரியனே

மலையக மக்களின்
மவுனத்தின் ஒலியாய்
மலரும் எதிர் காலத்தின்
மகத்தான விடியலாய்

வளர்க சூரியனே! புதுமை ஏந்தி
வலம் வருக புதுச் சூரியனே!

**லிந்துல, எஸ். ரவி**




**நல்வாழ்த்துக்கள்**

★ மலிவு
★ தெளிவு
★ விரைவு
★ அழகு

**நந்தகுமார்**
**அட்டன்.**


அட்டை: ஸ்கிறின் பிரின்டிங் நந்தா

சமன் அச்சகம், அட்டன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டைப்படக் கவிதை

இருளின் கனத்தால்
துடித்த போதெல்லாம்
துவசம் செய்யப்பட்டன
எங்கள் வெளிச்சங்கள்!

வாய் திறக்கிற போதெல்லாம்
சிறை கதவுகளும்
திறக்கப்பட்டன!

முஸ்லிகள் நொறுக்கப்பட்டு
மிருகங்களைப் போல
சிறையுள் திணித்தனர்!

விடியலை நசித்த
கரங்களுக்கே
மாலை அணிவித்த
எங்கள் தலைமைகளின்
வேஷம் கிழிக்கப்படுகையில்,

தலைக்குள் புகும்
அட்டைகள் பற்றி
பேசும் போதும்
சிறைகள் நிறைந்தன!

ஜன நாயகம்
அவர்களுக்கு மட்டும் உரிமை(யோ)

விடியல்களை அள்ளி
புதைத்தார்கள்
மீண்டும் தொடரும்
வெள்ளையன் வாரிசுகள்

தொடரும் போக்கின் யதார்த்தத்தில்
நாம் இன்னுமொரு
1948 யை நோக்கி பயணிப்போம்!

WEB : http\\www.thamizham.net

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org